**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.177/2016</u>**

<u>முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,</u>

<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.</u>

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் நாள் புதன்கிழமை வாதி தரப்பில் மூன்றாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கவிதா, மொழிபெயர்ப்பாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வகுமார் (எ) செல்வராஜ் | தந்தை பெயர் | : | முத்தையா |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 05.03.2025

**P.W. : 3**

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

சுப்ரமணியன் வங்கியில் வேலை செய்து வந்தார். அவர் அடகு கடையும் மணப்பாறையில் நடத்தினார். சுப்ரமணியன் நடத்திய பார்வதி அண்ட் கோ பெயரில் அடகு கடை இல்லை., ஸ்ரீ பார்வதி அண்ட் கோ என்ற பெயரில் அந்த கடையை வாதிகள் மணப்பாறையில் நடத்துகிறார்கள்.

பார்வதி அண்ட் கோ என்ற பெயரில் நடந்த கடையும் தற்போது ஸ்ரீ பார்வதி அண்ட் கோ என்ற பெயரில் நடந்து வரும் கடையும் ஒரே இடத்தில்தான் நடக்கிறது. பார்வதி அண்ட் கோ என்ற கடை எப்போது மூடப்பட்டது என்றால் சுப்ரமணியன் இருக்கும்போது அது மூடும் தருவாயில் இருந்தது. சுப்ரமணியன் இறந்தபிறகு அது மூடப்பட்டது. பார்வதி அண்ட் கோ என்ற கடையின் கணக்கு வழக்குகள் பார்க்கப்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும் கூறுகிறார் பார்வதி அண்ட் கோ கடையின் கணக்கு வழக்குகள் பார்க்கும்போது நானும் இருந்தேன். அந்த கணக்கு வழக்கை நான்தான் படித்தேன். பார்வதி அண்ட் கோ கடையில் என்ன நகைகள் இருந்தது என்பதும், எவ்வளவு பணம், சொத்துக்கள் இருந்ததும் நான் படித்ததாக கூறும் கணக்கில் இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி கடையின் கணக்குகள் பார்க்கும்போது 1 ஆம் பிரதிவாதி மற்றும் இறந்துபோன சுப்ரமணியன் ஆகியோர் இருந்தார்கள். கணக்கு பார்த்த அன்று அது எழுதப்பட்டது. அதை யார் எழுதினார்கள் என்றால் நான், 1 ஆம் பிரதிவாதி மற்றும் சுப்ரமணியன் ஆகியோர் எழுதினோம். கடையில் எவ்வளவு ஸ்டாக் இருந்தது என்றால் ரூ.2,10,00,000/— மதிப்புக்கு இருந்தது. எனக்கு தொழில் விவசாயம் ஆகும். எனக்கு நகை கடை பற்றி அனுபவம் உண்டா என்றால் நான் ஒரு செட்டியாரிடம் வேலைக்கு இருந்தேன். அதனால் எனக்கு அனுபவம் உண்டு. நான் ரூ.2,10,00,000/— மதிப்புள்ள நகைகள் என்பது தங்கம் மற்றும் வெள்ளி நகைகளாகும். அவ்வாறு கடைக்கான ஸ்டாக்குகளை எந்த தேதி, மாதம், வருடம் கணக்கு எடுத்தோம் என்றால் ஞாபகமில்லை. நாங்கள் கணக்கு எடுத்ததாக சொல்லும் சமயத்தில் தங்கம் ஒரு பவுன் விலை மற்றும் வெள்ளி ஒரு கிலோ விலை

எவ்வளவு என்று தெரியாது. எந்த அடிப்படையில் அந்த கடையின் மொத்த ஸ்டாக் மதிப்பு ரூ.2,10,00,000/- என்று கூறுகிறேன் என்றால் கடையிலிருந்த நகை கடை ரசீதுகள், இருந்த நகைகள் ஆகியவற்றை வைத்து அந்த கணக்கை முடிவு செய்தோம். அந்த தேதியில் எவ்வளவு பவுன் நகைகள் மற்றும் எவ்வளவு கிலோ வெள்ளி அந்த கடையில் இருந்தது என்று தற்போது குறிப்பாக என்னால் சொல்ல முடியாது. சுப்ரமணியனுக்கும், 1 ஆம் வாதிக்கும் என்ன உறவு என்றால் 1 ஆம் வாதி சித்ரா சுப்ரமணியனின் 2 வது மனைவி ஆவார். ஜெயந்தி என்பவர்தான் சுப்ரமணியத்தின் மனைவி என்றால் அவர் முதல் மனைவி ஆவார். ஜெயந்தி எப்போது இறந்துபோனார் என்றால் 15.12.1995 அன்று இறந்துபோனார். 1 ஆம் வாதிக்கும் சுப்ரமணியனுக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 26.03.1997 அன்று நடந்தது. அந்த திருமணத்திற்கு நான் போயிருந்தேன். அந்த திருமணம் வத்தலதொப்பம்பட்டியில் உள்ள கதிரேச பெருமாள் கோவிலில் நடந்தது. அந்த ஊரில் எனது பெரிய அக்கா சீதையம்மாள் இருந்தார். அவர் இறந்துவிட்டார். அந்த கோவிலில் திருமணம் நடந்ததைக் காட்ட ரசீது கொடுத்தார்களா என்றால் அது சிறிய கோவில் ஆகும். ரசீது கொடுக்கவில்லை. அந்த திருமணத்திற்கு சுமார் 40 அல்லது 50 பேர் வந்திருந்தார்கள். எங்கள் குல வழக்கத்தில் எவ்வாறு திருமணம் செய்வார்கள் என்றால் தங்க செயினில் மஞ்சள் கயிறை சுற்றி சேர்த்து வைத்து கட்டுவார்கள். வெறும் மஞ்சள் கயிறையும் கட்டும் வழக்கம் உண்டா என்றால் வசதி இல்லாதவர்கள் அவ்வாறு கட்டுவார்கள். சுப்ரமணியனுக்கும், 1 ஆம் வாதிக்கும் நடந்ததாக கூறும் திருமணத்தில் எவ்வாறு தாலி அணிவிக்கப்பட்டது என்றால் தங்க தாலி செயினுடன்

மஞ்சள் கயிறு சேர்த்து அணிவிக்கப்பட்டது. அந்த கோவிலின் அப்போதைய பூசாரி பெயர் தெரியாது. அந்த கோவிலுக்கு தற்போதும் பூசாரி உள்ளனர். திருமணம் மேற்சொன்ன கோவிலில் நடந்தால் பூசாரி முன்னால் நடக்குமா என்றால் பூசாரி இருந்தால் அவர் முன்னாலும், ஐயர் இருந்தால் அவர் முன்னாலும் நடக்கும். திருமணம் நடந்ததாக சொல்லும் அன்று அந்த கோவிலில் பூசாரி இருந்தார். 2, 3 வாதிகள் 1 ஆம் வாதியின் மகன்கள். திருமணம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் 1 ஆம் வாதி சித்ரா எங்கு வாழ்ந்தார் என்றால் மணப்பாறையில் சேதுரத்தினபுரத்தில் வாழ்ந்தார். நான் முதல்விசாரணையில் கூறியுள்ள வாசாஆ.15 உடன்படிக்கை ஆவணத்தைப் பற்றி எனக்கு நேரடியாக தெரியும். பிரதிவாதிகளுடன் இரண்டு உடன்படிக்கைகள் தனித்தனியாக ஏற்பட்டது. உடன்படிக்கை ஏற்பட்டதாக சொல்லும் சமயத்தில் 2, 3 வாதிகளின் வயது என்ன என்றால் மூத்தவருக்கு சுமா்ர 15 வயது இருக்கும், இளையவருக்கு சுமார் 11 அல்லது 12 வயது இருக்கும். உடன்படிக்கை ஏற்பட்டதாக சொல்லும் சமயத்தில் 2, 3 வாதிகள் அங்கு இருந்தார்களா என்றால் அங்குதான் இருந்தார்கள். சிறு வயதினர் என்பதால் அந்த நடவடிக்கையில் கலந்து கொள்ளவில்லை. அந்த உடன்படிக்கை எந்த தேதி, மாதம், வருடம் நடந்தது என்றால் 20.06.2017 அன்று ஒரு உடன்படிக்கையும், 1 ஆம் பிரதிவாதியுடன் எழுதிக்கொண்ட உடன்படிக்கை தேதி சரியாக ஞாபகமில்லை. 1 ஆம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திய உடன்படிக்கை 20.06.2017 க்கு முன்பாகும். 1 ஆம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். அந்த தேதியில் யார், யார் இருந்தார்கள் என்றால் 1 ஆம் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும்போது நான், பரமசிவம், சிவகாமி, சகுந்தலை அம்மாள், முத்துராமலிங்கம் ஆகியோர் இருந்தோம்.

அந்த ஒப்பந்தப்படி 1 ஆம் பிரதிவாதிக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்றால் மதிப்பின் அடிப்படையில் ரூ.47,50,000/– மும், 1 ஆம் பிரதிவாதி அந்த கடையில் வேலை செய்த காரணத்திற்காக ரூ.7,50,000/– மும் கொடுக்கப்பட்டது. அந்த பணத்தை யார் கொடுத்தார்கள் என்றால் சுப்ரமணியன்தான் கொடுத்தார். ரொக்கமாகவே கொடுத்தார். வெளியில் யாரிடமோ வாங்கி அதை கொடுத்தார். சுப்ரமணியன் வங்கியில் கணக்கு வைத்திருந்தாரா என்றால் வைத்திருந்தார். அந்த வங்கி கணக்கில் அவ்வளவு பணம் இருந்ததா என்றால் இல்லை. வெளியில் யாரிடம் சுப்ரமணியன் பணம் வாங்கிக் கொடுத்தார் என்றால் அந்த விபரத்தை அவரிடம்தான் கேட்க வேண்டும். 2 ஆம் பிரதிவாதிக்கு 2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்றால் ரூ.47,50,000/– கொடுக்கப்பட்டது. கடையிலிருந்து 1 ஆம் வாதி சித்ராவிடமிருந்து வாங்கி கொடுக்கப்பட்டது. அந்த தொகை 2 அல்லது 3 தவணைகளாக கொடுக்கப்பட்டது. முதல் தவணையில் ரூபாய் மூன்று இலட்சம் கொடுக்கப்பட்டது. அந்த தேதி ஞாபகமில்லை. அதற்கு ஆவணம் உள்ளது. இரண்டாவது தவணையில் 2 ஆம் பிரதிவாதிக்கு ரூபாய் ஐந்து இலட்சம் கொடுக்கப்பட்டது. அந்த தேதி ஞாபகமில்லை. அதற்கு ஆவணம் உள்ளது. 3 வது தவணையில் அவருக்கு ரூ.50,000/– கொடுக்கப்பட்டது. அதற்கு ஆவணம் உள்ளது. தேதி ஞாபகமில்லை. அதன்பிறகு அவருக்கு மீண்டும் ரூபாய் 3 இலட்சம் 13.04.2017 அன்று கொடுக்கப்பட்டது. எல்லா பரிவர்த்தனைக்கும் ஆவணம் உள்ளது. சாட்சி மீண்டும் கூறுகிறார் – அந்த தேதிக்கு முன்பாகவே 2 ஆம் பிரதிவாதி எழுதிக் கொடுக்க மறுத்துவிட்டார். 13.04.2017 அன்று ரூபாய் 3 இலட்சம் பணம் கொடுக்கப்பட்டதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் ஆதாரம் உள்ளது. பஞ்சாயத்து நடந்தது,

அதற்கு ஆதாரம் உள்ளது. வாசாஆ.15 ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஆவணத்தைப் பார்க்க வேண்டும். சாட்சி ஆவணத்தைப் பார்த்துவிட்டு கூறுகிறார் – என்னிடம் காட்டப்படுவதில் என் கையொப்பம் இல்லை, அதிலேயே இன்னொரு தாள் இருக்க வேண்டும். அந்த வேறொரு தாளில் என்னைத் தவிர வேறு யார்யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் சித்ரா, சிவலிங்கம், முத்துகுமார், மகாராஜா ஆகியோர் போட்டுள்ளார்கள். எனக்கு 2 ஆம் பிரதிவாதியை அவர் பிறந்தது முதலே தெரியும். அவர் பெரும்பாலும் ஆங்கிலத்தில்தான் கையொப்பம் செய்வார். வாசாஆ.15 உடன்படிக்கையில் 2 ஆம் பிரதிவாதிக்கு தொகை கொடுக்கப்பட்டுவிட்டதாக எழுதப்பட்டதா அல்லது தொகை கொடுக்க வேண்டி உள்ளதாக எழுதப்பட்டதா என்றால் தொகை கொடுக்கப்பட்டுவிட்டதாக எழுதப்பட்டுள்ளது. வாசாஆ.15 ல் உள்ள வாசகங்களை யார் எழுதினார்கள் என்று பெயர் தெரியாது. 20.06.2017 அன்று ஒரு ஆவணம் ஏற்பட்டது. அது 1 ஆம் வாதிக்கும், 2 ஆம் பிரதிவாதி சிவலிங்கத்திற்கும் ஏற்பட்டது, அந்த ஆவணத்திற்கும் 1 ஆம் பிரதிவாதிக்கும் சம்மந்தம் இல்லை. 1 ஆம் பிரதிவாதி தந்தை இருக்கும்போது கணக்கு பார்த்து சென்றுவிட்டார். வாசாஆ.16 அதாவது 20.06.2017 அன்று ஆவணம் எழுதப்பட்ட போது 1 ஆம் பிரதிவாதி விஜய் அங்கு இல்லை. வாசாஆ.16 ல் 25 ஜனவரி 2017 என்று தட்டச்சு செய்யப்பட்டு அதற்கு மேலே 20 ஜூன் என்று பேனாவால் திருத்தம் செய்யப்பட்டதா என்றால் தவறாக தட்டச்சு செய்யப்பட்டதால் திருத்தப்பட்டது. அதற்கு கீழே திருத்தம் என்று எழுதப்பட்டுள்ளது. வாசாஆ.16 ல் 2, 3 வாதிகளை வாரிசுகளாக காட்டியுள்ளார்கள். வாசாஆ.16 ல் 1 ஆம் பிரதிவாதியைப் பற்றி ஏதும் குறிப்பு உள்ளதா என்றால் அவர்

ஏற்கனவே வாங்கி சென்றுவிட்டதால் அவர் பற்றிய குறிப்பு இல்லை. வாசாஆ.16 மொத்தம் எவ்வளவு தாள்கள் என்றால் 4 முதல் 6 பக்கம் உள்ளது. அந்த ஆவணம் அடகு கடையில் வைத்துதான் எழுதப்பட்டது. அந்த அடகு கடையில் கணிபொறி இல்லை. அங்கு எழுதிக் கொண்டுபோய் வெளியில் டைப் செய்து எடுத்து வந்தார்கள். வாசாஆ.16 அந்த தேதியில் எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்றால் நிறைய ஆவணங்கள் எழுதியுள்ளதால் நேரம் சரியாக சொல்ல முடியாது. பிரதிவாதிகளிடம் மொத்தம் எத்தனை ஆவணங்கள் எழுதி வாங்கப்பட்டது என்றால் சுமார் 5 இருக்கும். 2 ஆம் பிரதிவாதிக்கு பணம் கடையிலிருந்து கொடுக்கப்பட்டதா, வெளியில் வாங்கி கொடுக்கப்பட்டதா என்றால் வெளியில் வாங்கிதான் கொடுக்கப்பட்டது. அவ்வாறு கொடுத்த பணத்திற்கு கணக்கு புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. முத்துகுமார், மகாராஜா யார் என்றால் முத்துகுமார் எனக்கு உறவினர். மகாராஜா 2 ஆம் பிரதிவாதி சிவலிங்கத்தின் சின்ன மாமியாரின் கணவர். 20.06.2017 ல் எழுதப்பட்ட ஆவணம் ஒரு முத்திரைத்தாளிலும், மற்ற தாள்களிலும் எழுதப்பட்டது. மற்றவை கான்க்ரீட் பேப்பர் ஆகும். அந்த அடகு கடையில் 1 ஆம் பிரதிவாதி விஜய் வேலை பார்த்தார். 2 ஆம் பிரதிவாதி வேலை பார்க்கவில்லை. 1, 2 பிரதிவாதிகளுக்கு எந்த பணமும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ.15, 16 ஐ நானும், 1 ஆம் வாதியும் சேர்ந்து தயாரித்தோம் என்றால் சரியல்ல. 1 ஆம் வாதிக்கும், சுப்ரமணியனுக்கும் நான் சொன்ன தேதியில் திருமணம் நடந்தது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

2 ஆம் பிரதிவாதி தரப்பில் 1 ஆம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.